முருகப்பெருமான் துணை

**மகான் முருக நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.01.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. பிரணவ சித்தியே அரங்கராஜா
   பேருலகை ஞான வழிநடத்திட
   சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
   சற்குருவே உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
   குறையிலா பிலவ சிலைதிங்கள்
   இருபானை திகதி கதிர் வாரம்
   (பிலவ வருடம் மார்கழி மாதம் **25**ம் நாள், **09.01.2022** ஞாயிற்றுக்கிழமை)
   இயம்பிடுவேன் முருக நாயனார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
   உண்மை நெறி சைவ நெறியை
   ஞானமாகத் தரும் அரங்கன் வழி
   ஞானபண்டிதன் காட்டும் வழியாகும்
4. ஆகவே அலட்சியம் கொள்ளா
   அனுகியே கலிவாழ் மக்கள்
   மிகைபட சரணடைவு கொண்டு
   மேலான வழியென தொடர்ந்துவர
5. வருகவே எந்தவித சக்தியாலும்
   வதை உபாதை என்பதில்லா
   பெரும் பாதுகாப்புக் கூடியே
   பேரிடரையும் வெல்ல நேரும்
6. நேருமையான வாழ்வும் திடமும்
   நீதிமானாகவும் நடக்க அருளும்
   ஆறுமுக அரங்கன் அருளுபதேசம்
   அவசியம் மக்கள் ஏற்றுவர
7. வருகவே தன்னுள் மாற்றம்
   வடிவேலன் சக்தியாகக் கண்டு
   தரும சிந்தை பெருகி இனிதே
   தருமவான்களாக வாழ நேரும்
8. நேருமை கொண்ட வண்ணம்
   நிலமதனில் ஆளுமை சக்திகளும்
   ஆறுமுக அரங்கன் திருவடியை
   அடைந்துமே தீட்சை ஆசிபெற
9. ஆசிபெற அதிகார வர்க்கங்கள்
   அனைவருக்கும் இயல்பு நிலையாக
   ஆசிவழி தயாள குணம் கூடி
   ஆசைவழி செல்லா தயவுகொண்ட

10. கொண்டநல் உயர் சேவை ஆற்றி
குறைபாடில்லா ஞான ஆட்சியாக
தொண்டு வழி சிறந்து மக்களை
தூயவழியில் வழிநடத்தி இனிதே

11. இனிதே உலகினில் மாற்றம்
இயம்பிடுவேன் ஆறுமுகன் ஆசிபட
துணிவாகச் செய்து சிறப்பர்
தெரிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–